## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.20/2024 நாள் : 29.02.2024**

**<u>பொதுமக்களுக்கு எவ்வித தடையுமின்றி குடிநீர் வழங்குவதை அனைத்து மாநகராட்சி, நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் உறுதிப்படுத்திட வேண்டும்</u>**

**<u>மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் அறிவுறுத்தல்</u>**

இன்று (29.02.2024) சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் வழங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

<u>இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது.</u>

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 1040 MLD-க்கும் மேலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 1 கோடிக்கும் மேலான பொதுமக்கள் இதன்மூலம் பயனடைந்து வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் நாளொன்றுக்கு 2071 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், 12 மாநகராட்சிகள், 65 நகராட்சிகள், 346 பேரூராட்சிகள் மற்றும் 52,361 ஊரக குடியிருப்புகளில் உள்ள மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும், மீதமுள்ள உள்ளாட்சி அமைப்புகள் தங்களது சொந்த பராமரிப்பு மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொண்டு வருகிறது.

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் சீரான குடிநீர் விநியோகத்தை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். உரிய இடைவெளியில் குடிநீர் விநியோகம் மேற்கொள்வதை தினந்தோறும் அலுவலர்கள் நேரிடையாக ஆய்வு செய்து அது தொடர்பான அறிக்கைகளை சம்பந்தப்பட்ட இயக்குநரகங்களுக்கு அனுப்பி வைத்திட வேண்டும். மேலும், மேல்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை தொடர்ந்து முறையாக பராமரித்து பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை உறுதிப்படுத்திட வேண்டும். பராமரிப்பு பணிகள் எவ்வித தொய்வுமின்றி மேற்கொண்டு பொதுமக்களுக்கு சிரமங்கள் ஏற்படாத வண்ணம் பணிகள் முடிக்கப்பட வேண்டும். அனைத்து மாவட்டங்களில் உள்ள கூட்டு குடிநீர் திட்டங்களின்கீழ் பயன் பெறும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவினை வழங்கிட வேண்டும்.

சாலை விரிவாக்கப் பணிகள், மேம்பாலப் பணிகள், மெட்ரோ ரயில் பணிகள் மேற்கொள்ளப்படும்பொழுது சம்பந்தப்பட்ட துறையினருடன் ஒருங்கிணைந்து பணியாற்றி குழாய்களுக்கு சேதம் ஏற்படாமல் பணிகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து பிற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மூலம் பராமரிக்கப்பட்டுவரும் குடிநீர் திட்டங்கள், நீராதாரங்கள் அனைத்தும் முறையாக பராமரிக்கப்படுவதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், திரு.வி.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., இயக்குநர், பேரூராட்சிகள், திரு.கிரன் குராலா, இ.ஆ.ப., இயக்குநர், நகராட்சி நிர்வாகம், திரு.எஸ்.சிவராசு, இ.ஆ.ப. மற்றும் தலைமைப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், மண்டல பொறியாளர்கள் உள்பட பல்வேறு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater